பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை–108 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திரு.க.மகரபூஷணம், இ.ஆ.ப.,

ந.க.எண்.12592/2015/அ7 நாள் 24.02.2016

பொருள் – பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – அனைத்து நிலை செயல் அலுவலர்கள், தலைமை எழுத்தர்/ உதவியாளர் ஆகியோர்களுக்கான 01.01.2012, 01.01.2013, 01.01.2014 மற்றும் 01.01.02015ம் ஆகிய ஆண்டுகளுக்கான தற்காலிக பணி முன்னுரிமை பட்டியல் வெளியிடுதல் – ஆணையிடப்படுகிறது

பார்வை –
1) அரசாணை எண்.270 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04.04.1990
2) அரசாணை எண்.62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.04.2009
3) அரசாணை எண்.42 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.04.2012
4) அரசாணை எண்.107 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.11.2012
5) இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 6793/ 2009/அ7 நாள் 12.07.2013

----

<u>ஆணை–</u>

அனைத்து நிலை செயல் அலுவலர்கள் மற்றும் தலைமை எழுத்தர்/ உதவியாளர் ஆகியோர்களுக்கான மாநில அளவிலான 01.01.2012, 01.01.2013, 01.01.2014 மற்றும் 01.01.2015ம் தேதிய நிலையில் தற்காலிக பணி முன்னுரிமை பட்டியல் வெளியிடப்படுகிறது. மேற்காண் தற்காலிக முன்னுரிமை பட்டியல் பேரூராட்சிகள் துறை இணைய தள முகவரியான www.tn.gov.in/dtp-ல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விவரத்தை அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2) இந்த முன்னுரிமை பட்டியல் தற்போது பணியில் உள்ள மற்றும் ஒய்வு பெற்ற அனைத்து நிலை பணியாளர்களுக்கும் தனித்தனியே சார்வு செய்து உரிய ஒப்புதலுடன் இவ்வியக்ககத்திற்கு 10 நாட்களுக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3) இப்பட்டியலின் மீது மேல்முறையீடு தெரிவிக்கும் பணியாளர்கள் இச்செயல்முறை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் வழியாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்க்கு பின்னர் வரப்பெறும் மேல்முறையீடுகள் பரிசீலிக்கப்படாது.

ஒம்/–க.மகரபூஷணம்
இயக்குநர்

இணைப்பு – அனைத்து நிலை செயல் அலுவலர்
மற்றும் உதவியாளர்/ தலைமை எழுத்தருக்கான
தற்காலிக முன்னுரிமை பட்டியல்

பெறுநர்

பட்டியலில் கண்ட அலுவலர்கள்

(சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மூலமாக)

நகல் –

1. அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம், சென்னை–9 (தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)
2. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
3. அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
4. அ7 மற்றும் இ4 இருப்பு கோப்பு
5. அறிவிப்பு பலகை

/உத்திரவுப்படி/

24/2/16
இயக்குநருக்காக

24.2.16